# நீர்வழிப்படூஉம் குறிப்பிடும் நாவிதர்கள்

***பா. பாண்டிச்செல்வி***
உதவிப்பேராசிரியர், தமிழியல் துறை
ஸ்ரீ காளீஸ்வரி கல்லூரி (தன்னாட்சி), சிவகாசி

https://doi.org/10.5281/zenodo.15526561

*பண்டைய காலத்தில் மக்கள் அனைவரையும் நான்கு வருண பாகுபாட்டின் கீழ் வரிசைப்படுத்தியிருந்தனர். மக்கள் அனைவரும் அவர்கள் செய்யும் தொழிகளின் அடிப்படையில் பாகுபடுத்தியுள்ளனர். அவ்வகையில் நோக்கும் போது தேவிபாரதி படைத்த நீர்வழிப்படூஉம் நாவலில், "நாவிதர்கள்" என்னும் ஓர் குறிப்பிட்ட சமூகம் சார்ந்த மக்களின் வாழ்வியலானது சிறப்பாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.*

**நாவிதர் - வரலாறு**

*முற்காலத்தில் கிராமப்புறங்களில் நாவிதர் சமூகமானது ஓர் முக்கிய இடத்தினைப் பெற்றிருந்தது. நாவிதர்கள் இன்றி எந்தவொரு செயலும் நடைபெறாது என்னும் நிலையானது காணப்பட்டது.*

*நாவிதர்களைப் பொதுவாக அம்பட்டன் என்று அழைப்பர். அம்பஷ்டர் பண்டைய இந்தியாவில் தோன்றிய வருணக்கலப்பு சாதிகளில் ஒன்று. சுவாயம்பு மனுவின் மனு தருமசாத்திரத்தின்படி, பிராமணத்தந்தைக்கும், வைசியத் தாய்க்கும் பிறந்தவர்கள் அம்பஷ்டர் எனும் வகுப்பினர் ஆவார். அம்பஷ்டர்களின் குலத்தொழில் மருத்துவம் பார்த்தல் மற்றும் முக அலங்காரம் செய்தல் ஆகும். நாவிதர்களின் தோற்றத்தினைக் குறிப்பிடும் போது உருமாலை என்னும் ஒரு வகை உடுப்பு உடுத்தி காணப்படுவதாக ஆசிரியர் இப்புதினத்தில் பதிவுசெய்யதுள்ளார்.*

*"உருமாலையைக் கழற்றி கழுத்திலும் நெஞ்சிலும் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டார்." (நீ.ப.ப.23)*

"Thus the offspring of a Brahmin father and a vaishya mother is an Ambashtha, whose occupation is medicine."[1]

"They were at first classed among the Ksatriyas but by inter&marrying with other castes like the Brahmins, Vaisyas and others, they became intermixed. They took to different professions like the priesthood, farming, and medicine."[2] *என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது. மேலும் இவர்களை குடிமகன் என்றும் அழைப்பர்.*

"The Kudimahan have several synonyms such as Navidan, Nasvan, Maruttuvar, Nosivan, Ambattan. Ambattan is derived from the Sankrit words amba "near" and "stha" to stand i.e. he who stands near to share his clients to treat his patients. Navisan means a holy man and Nasuvan means those sprung from the nose. Marutthuvar is derived for the word maruntu, medicine as they act as the village doctors also and their wives are called maruttuvacci as they generally attend the deliveries in villages."[3]

*காலப்போக்கில் இச்சமூகத்தினரின் ஒரு குழுவினர் கிழக்கு இந்தியா மற்றும் தென்னிந்தியாவில் குடியேறினர். இச்சமூகத்தினரைத் தெலுங்கு மொழி பேசும் மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம் மற்றும் தெலங்கானாவில் மங்களா[4] என்றும், தமிழ்நாட்டில் நாவிதர் என்றும் அழைப்பதுண்டு.*

*நாவிதர் என்ற சொல் ஆண்களையும் நாவிதச்சி என்னும் சொல் பெண்களையும் குறிப்பதாகவும் அமைகிறது. இச்சொல் கால வழக்கில் நாசுவத்தி என்று மருவி இருப்பதாகக்*

*கருதலாம். புதினத்திலும் ஆசிரியர் நாசுவத்தி, நாசுவன் என்ற சொல்லாடலையே பயன்படுத்தியுள்ளார்.*

***எண்ணி எட்டே நாள்ள நல்ல கொங்கு நாசு வனாப் பாத்துக் கொண்டாந்து வெக்கிலீனா நாகவண்டனுக்குப் பொறக்கிலீனு வெச்சிக்குங்க (நீ.வ.ப.பக்- 61)***

***மங்கல அமங்கல காரியம் புரியும் குடிமக்கள் - நாவிதர்கள்***

*இன்றைய நிலையில் தமிழ்நாட்டுக் கிராமங்களில் மக்களுக்குத் தேவையான முக்கியமான பணிகளைச் செய்துவந்த 18 வகைத் தாழ்த்தப் பட்ட இனங்களுடன் நாவிதர்களும் அடங்கும். இந்த இனத்தினர் யாவரும் குடிமக்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். இப்பதினெட்டு வகை இனத்தவரும் குடிமக்கள் பிரிவினைச் சேர்ந்தவராகக் கருதப்பட்ட போதிலும் நாவிதக் குலத்தைச் சேர்ந்தவர் மட்டிலும் குடிமக்கள் என்ற பெயரை இன்றுவரை தக்க வைத்துக் கொண்டிருக்கின்றனர். ஏனெனில் கிராம மக்களுக்கு முடி வெட்டும் சேவையுடன் மங்கலக் காரியங்கள் மட்டுமின்றி அமங்கலக் காரியங்களுக்கும் அவசியமான பணிகளை நாவிதர்கள் மட்டுமே செய்து வருகின்றனர்.*

***"நாவிதனின் துணை இல்லாமல் யாரையும் காடு கொண்டு போய்ச் சேர்த்து விடவும் முடியாது. மூச்சு நின்றது தெரிந்தால் முதலில் தங்கள் நாவிதனுக்குத்தான் சொல்லிவிடுவார்கள் பண்ணையக்காரர்கள். (நீ.ப.ப.59)***

*இவைகளைக் கல்வெட்டுகளின் மூலம் அறியமுடிகின்றன. சான்றாக மங்கலச் சடங்குகளின்போது அடிப்படைப் பணிகளில் நாவிதர்கள் ஈடுபட்டிருந்தமையால் அவர்கள் மங்கல வினைஞர், மங்கலையன் என்றும், நாவிதப் பெண் மங்கலை என்றும் அழைக்கப்பட்டனர்.*

***"தன் குடிநாவிதன் இல்லாமல் எவ்வளவு பெரிய பண்ணையக்காரரானாலும் கல்யாணம்காட்சி என ஒரு காரியம் செய்வதற்கும் சும்மா கைகளை வீசிக் கொண்டு இறங்கிவிட முடியாது. (நீ.ப.ப.58)***

*என பிறப்பிலிருந்து இறப்புவரை அனைத்துக் காரியங்களிலும் குடிநாவிதர்களின் பங்கே பெரிதும் காணப்படுகிறது.*

## தொழில்

*மனிதன் தேட வேண்டிய அத்தியாவசியங்களுள் ஒன்று செல்வம். தன்னைச் சமுதாயத்தில் உயர்த்திக் காட்டுகிற செல்வத்தை ஈட்ட பலர் மேற்கொள்ளும் ஒரு வழிமுறை தொழிலாகும். நாவிதர்களின் தொழில் தன் பண்ணையக்காரர்களுக்குக் குடிமுறைகள் செய்வதாகும். குடிமுறைகள் என்பது தன் பண்ணையக்காரர்களுக்கு பணிவிடை செய்தாகும்.*

*"பண்ணாடிகளுக்கு கை, கால்கள் பிடித்து விடுவதிலிருந்து, எண்ணெய் தேய்த்து விடுவதிலிருந்து, முதுகு தேய்ப்பதிலிருந்து, முள்வாங்கிவிடுவதிலிருந்து, மூலத்துறையிலிருந்து பட்டைச் சாராயமும் கள்ளும் வாங்கி வந்து கடிப்புக்கு பன்றிக்கறி வறுத்து ஊற்றிக் கொடுப்பதிலிருந்து, பண்ணையக்காரர்களின் கூத்தியாள்களுக்கு ரகசியமாய்த் தவச தானியங்களும் துணிமணிகளும் நகைநட்டுகளும் கொண்டுபோய்ச் சேர்ப்பதிலிருந்து பண்ணாடிச்சிகளுக்காக் கடை, கண்ணிகளுக்குப் போய்வருவதிலிருந்து எல்லா ஊழியங்களையும் செய்து ஊர்க்காரர்களிடம் நல்ல பெயர் எடுத்திருந்தவர் அம்பிகாபதியண்ணன்." (நீ.ப.ப.43)*

*மேலும் இவர்களின் முக்கியமான தொழில் சவரம் செய்வதாகும். அம்பட்டன் என்ற தமிழ் சொல்லானது அம்பாஸ்தா என்னும் சமஸ்கிருத சொல்லிலிருந்து தோன்றியது. மேலும் இச்சொல்லின் பொருளானது, அருகில் நின்று முடிதிருத்தும் ஒருவரைக் குறிக்கும்[5] சொல்லாகும். காருமாமா சிறந்த குடிநாவிதர். அவருக்கு ஒருவன் முடிதிருத்த முடியாது என்று கூறுகையில் காரு மாமா கூறிய சொற்களில் அத்தொழில் நாவிதர்களுக்கு எவ்வளவு முக்கியம் என்பதை உணர முடிகிறது.*

*"இந்தக் கையால எத்தன பேருத்துக்கு மசரு வெட்டீருப்பென்னு உனக்குத் தெரியுமா? எத்தன மூஞ்சிக்குச் செரச்சுட்ருப்பே? எத்தன பேரு தலைல ஈரும்பேனும் புடுச்சுக் கெடந்துருக்குது? எத்தனப்பேருக்குச் செரங்கு புடிச்சுருந்துருக்குது? அதையெல்லாம் பாத்தா ஒரு நாசுவ தொழில் பண்ண முடியுமா?" (நீ.ப.ப.185)*

*மனிதனை சாதி, மதம், இனம் என அனைத்தையும் கடந்து ஓர் உயிராக மதிக்கும் குணம் உடையவர்களாக காணப்படுகின்றனர். நாசுவன் என்பவன் தன் தொழிலை எந்த நிலையிலும் தாழ்வாக எண்ணக் கூடாது என்பதையும் அனைவரையும் சமநிலையில் நடத்த வேண்டும் என்பதையும் அறிய முடிகிறது.*

**மருத்துவத்தின் முன்னோடி**

*நாவிதர் இனத்தினை சார்ந்த மக்கள் மருத்துவ சிகிச்சைக்கு வித்திட்டவர்களாக விளங்கினர். இதற்கு ஒரு இலக்கிய சான்றாகக் கொங்கு மண்டலச் சதகத்தில் கார்மேகக் கவிஞர் (9-ஆம் நூற்றாண்டு) விரிவாக எடுத்துரைக்கின்றார். கொங்கு நாட்டு மன்னனின் மகள் பிரசவ வலியால் துன்புற்றபொழுது சிசு வெளிவராத நிலையில் ஒரு நாவிதப் பெண், வயிற்றைக் கீறி,* (Caesarean) *சிசுவை வெளியே எடுத்ததைச் சிறப்புற விளக்குவது இங்கு நினைவு கூரத்தக்கதாகும்.*

***"குறைவறு தெண்ணீர் நதியணை காந்த புரத்தொருநல்***
***லிறைமகளார்மக வீனப் பொறாதுட லேங்கவகிர்***
***துறைவழி யேற்று மகிழ்வூட்டு மங்கலைதோன்றிவளர்***
***மறைவழி தேர்நறை யூர்தாடு சூழ்கொங்குமண்டலமே"***

***(கொ.ம.ச.பா.92)***

*நாவிதப் பெண்கள் மருத்துவச்சி என்று அழைக்கப்பட்டு, காலனி அரசு காலத்திலும் பணிபுரிந்துவந்தபொழுது இவர்களின் மருத்துவ முறை மேலை மருத்துவத்தை ஒத்து வராது, தூய்மையற்று இருந்ததன் காரணமாக, 1923-இல் காலனி அரசு இவர்கள் பணியை மேம்படுத்த பல முயற்சிகளை மேற்கொண்டது. இன்றளவும் மருத்துவமனைக்கு செல்வதற்கு போதுமான வசதியற்று இருக்கும் மக்கள் பலருக்கு நாவிதர்களின் சேவையையே பெரும் பயனாக அமைகிறது.*

*இதுபோலவே நாவித வகுப்பு ஆண்கள் அறுவை சிகிச்சை உட்பட பல மருத்துவப் பணிகளைப் புரிந்துள்ளனர். அம்பஷ்த சாதி பெண்கள் மகப்பேறு மருத்துவம் செய்வர்.*[6]

**நாவிதர் சிகிச்சை முறை**

*வரலாற்றின் இடைக்காலத்தில் நாவிதர்களே பொதுவான மருத்துவ சிகிச்சை யை எல்லோருக்கும் செய்து வந்தனர். இதன் காரணமாக இவர்கள் தங்கள் வசம் தீட்டிய கத்தி ஒன்றை வைத்திருப்பது வழக்கம். நீர்வழிப்படூஉம் நாவலில் குறிப்பிடப்பட்டுள்ள நாவித மக்களும் தாங்கள் தீட்டிய கத்தி ஒன்றினை உடன் வைத்திருப்பதை அறிய முடிகிறது.*

*"அந்த நள்ளிரவில் கம்பறு கத்தியை எடுத்து இடுப்பில் செருகிகொண்டு இருளைத் துளைத்துக் கொண்டு நடப்பது முதல், வீட்டை அடைந்த மாத்திரத்தில் இடுப்புவலி பிடித்துக் கிடக்கும் தாயைப் பரிசோதித்துக் குழந்தையின் உடல் சரியானவிதத்தில் புரண்டிருக்கிறதா, தலைப்பகுதி தட்டுப்படுகிறதா எனப் பார்த்து, வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து வயிற்றுக்கு விளக்கெண்ணெய் தடவி, கம்பறு கத்தியைக் கொண்டு அடிவயிற்றைக் கிழித்துக் குழந்தையை வெளியே எடுப்பது வரை, தொப்பூள் கொடியை அறுப்பது வரை, தாயிடமிருந்து நஞ்சுக்கொடியை அகற்றுவது வரை, குளிப்பாட்டுவது வரை, துணியைச் சுற்றித் தாயின் கைகளில் ஒப்படைப்பதுவரையும் அதற்குப் பிறகும் நடந்த ஒவ்வொன்றையும் பற்றி ஒரு கதை போல் விவரித்துக்கொண்டிருப்பாள் பெரியம்மா." (நீ.ப.ப.73)*

அதன் தொடர்ச்சியாக மருந்துகளால் நோய் குணமாகாது என்று மருத்துவர்களால் எண்ணப்பட்ட பொழுது அவர்கள் கட்டளைப் படி நாவிதர்கள் தேவையான அளவு கீறியோ அல்லது அட்டையைக் கடிக்கவிடுவதன் (Leeches) மூலமாகவோ இரத்தத்தை வெளியேற்றினர். இதை ஏன் மருத்துவர்கள் நாவிதர்களிடம் ஒப்படைத்தனர் என்றால், இது தனக்கு தரக்குறைவானது என்று எண்ணியதாலேயே ஆகும்.

### கொங்கு பகுதியிலுள்ள நாவிதர்

கொங்கு மண்டல மக்களிடையே நாவிதர்கள் பலவாறாக அழைக்கப்படுவதுண்டு. அதாவது குடிமகன் - சக்கரக்கத்தி குடிமகன் - மங்களன் - நாவிதன் - சக்கரக்கத்தி மருத்துவன் - பண்டிதன் என்பதாகும். இவர்கள் கவுண்டர்களின் நலம் விரும்பிகளாகவும், நலம் பேணுபவர்களாகவும் காலகாலமாக வாழ்ந்துவருகின்றனர்.

“கவுண்டர் மகன்கள் தனி வம்சமாக உருவானதாலும், குடிகளுக்கே மகன் என்பதாலும் குடிமகன் என்று கூறுவர். சக்கரை என்பதற்கு அணுக்கமானவன், தளபதி என்ற பொருளும் உண்டு. கவுண்டர்களுக்குத் துணைக்குத் துணையாக இருப்பதோடு, பிரியமுடன் கத்தி எடுத்து சவரம் செய்வதால் சக்கரக்கத்தி” என்றும் அழைப்பர்.

“மங்கள ரிஷியின் வம்சமாக உருவாகி வந்தவர்கள் என்ற நோக்கிலும், தீட்டு பாதிக்காதவர்கள் என்பதாலும் மங்களன் என்று கூறுவர். மும்மூர்த்திகளின் நெற்றியில் இருந்து தோன்றியவர்கள் என்ற கூற்றும் உண்டு. உலகில் சவர / மருத்துவ தொழில் செய்யும் மக்கள் தேவை என்று சிவபெருமான் தொப்புளிலிருந்து (நாபியில்) நாகங்கள் தலைவனான வாசுகியை அழைத்து உருவாக்கினாராம். சிவபெருமான் நாபியில் இருந்து தோன்றியதால் நாபிதர் - நாவிதர் என்றாகி விட்டனர். மருத்துவம் பார்ப்பதால் மருத்துவன் என்றும் மருத்துவத்துக்குப் பண்டுதம் பார்த்தல் (பண்டிதம்) என்ற வட்டார வழக்கின்படி பண்டிதன்” என்றும் கூறுவர்.

சவரம் செய்தல், மருத்துவம் பார்த்தல், அனைத்துக் கொங்கு குடும்ப சீர், சடங்குகள் செய்தல், தூது / தகவல் செல்லல் போன்றவை கொங்கு நாவிதரின் தலையாய கடமைகளாகும். மகன் என்ற உரிமை இருப்பதால் தான் நாவிதர் எப்போது வீட்டுக்கு வந்தாலும் தவறாது உணவிட்டு உணவு கொடுத்தனுப்பி வைப்பது. கவுண்டர்கள் வீட்டுக் கல்யாணத்தின் போது, கவுண்டரின் பிரதிநிதியாக உறவினர்களுக்குப் பத்திரிகை கொடுக்கவும், தூது செல்லவும் நம்பகமானவராக நாவிதர்கள் இருந்துள்ளனர். நாவிதர்கள் மருத்துவத்தில் நிபுணர்கள். அக்காலம் தொட்டு இக்காலம் வரையில் இதைக் கிராமங்களில் பார்க்கலாம். நாவிதர்கள் வைத்தியர்களாகவும், நாவிதப் பெண்கள் மருத்துவச்சிகளாக பிள்ளைப்பேறு பார்ப்பவர்களாகவும் விளங்கியுள்ளனர். இதனாலேயே நாவிதர்களுக்கு மருத்துவன் என்ற பேரும் உண்டு.

மருத்துவம் என்று மட்டுமின்றி, வாரமொருமுறை வந்து கவுண்டர்கள் உடற்பரிசோதனை செய்வது, எண்ணெய் குளியலுக்கு எண்ணெய் தேய்த்து விடுவது, சுளுக்கு மற்றும் நரம்பு பிடிப்புகளைத் தளர்த்துவது, எனிமா (புளிக்கரைசல்) தருவது என்று கவுண்டர்களின் நலம்பேணுபவர்களாக இருந்துள்ளனர்.

### சோழர் காலத்தின் - நாவிதர்கள்

சோழர் காலத்தில் நாவிதர்கள் மிகவும் உன்னத நிலையில் சிறப்புற்றிருந்தது கல்வெட்டுக்கள் மூலம் அறிய முடிகின்றது. இராஜராஜனின் கி.பி. 1014-ஆம் ஆண்டைய கல்வெட்டொன்றில் பஞ்சவன் மங்கலப் பேரரையன் அனையன் பவருத்திரன் மற்றும் இராஜராஜ பிரயோகத்தரையன் என்னும் பெயர் கொண்ட அறுவை சிகிச்சை செய்தவர்களைப் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிரயோகம் என்ற சொல் மருத்துவ சிகிச்சை

*யைக் குறிப்பிடும் சொல்லாகும். எனவே பிரயோகத்தரையன் என்ற சொல் மருத்துவ சிகிச்சை செய்பவனைக் குறிப்பிடுவதாகும். அனையன் பவருத்திரன் என்பவர் கோலினமை (கோலினமை - கோலி - மயிர்) என்ற தொழிலில் வல்லவன் என்ற குறிப்பு வருகின்றது. இப்பெயருக்கு அருகில் உள்ள இராஜராஜ பிரயோகத் தரையன் என்ற சொல் மருத்துவரைக் குறிக்கும். அம்பட்டன் என்ற சொல்லும் மருத்துவரைக் குறிக்கும். எனவே கோலினமை என்ற சொல்லும் மருத்துவத்துடன் தொடர்புடையதாகவே இருக்கும் என்று கல்வெட்டாய்வாளர் ஏ. சுப்பராயலு கருத்துத் தெரிவிக்கின்றார்.*

**தொகுப்புரை**

*பண்டைய கால மக்களின் வாழ்க்கையில் நாவிதர்களின் பங்கு இன்றியமையாமையாக இருந்ததை அறிய முடிகிறது. பண்டைய காலத்தில் அறுவை மருத்திற்கு முன்னோடியாக நாவிதர்கள் திகழ்ந்தைக் கல்வெட்டுச் செய்திகளும் உறுதிப்படுத்துகின்றன. கொங்கு மண்டல சதகத்தில் கார்மேகப்புலவரின் பாடல் வாயிலாக அறுவை மருத்துவத்தில் நாவிதர்களுக்குள்ள பங்கினை அறியமுடிகின்றது. கொங்கு மண்டலப் பகுதியில் குடியமர்ந்த நாவிதர் வரலாற்றை இதன் வழி அறிய முடிந்தது.*

*வாழ்க்கையின் மிக முக்கியமான சடங்கு முறைகளான திருமணச் சடங்கு, இறப்புச் சடங்கு இரண்டிலும் நாவிதர்களின் பங்கு மிக முக்கியமானதாகும். திருமண நிகழ்வின் தொடக்கமான பொருத்தம் பார்ப்பதில் தொடங்கி சீர் கொண்டு செல்வது வரை உள்ள அனைத்தையும் நாவிதர்கள் முன்னின்று நடத்தியுள்ளனர். இறப்பின் போதும் ஒருவரின் கைபிடித்துப் பார்த்து இறப்பை உறுதி செய்வதில் தொடங்கி அடக்கம் செய்வது வரை உள்ள அனைத்துச் சடங்கிலும் நாவிதர்கள் முன்னிற்பதுண்டு என்பதை இவ்ஆய்வின் வழி அறியமுடிகின்றது.*

**சான்றெண் விளக்கம்**


1. Major World Religions; From Origins to the Present, P 115
2. இந்து உலக கலைக்களஞ்சியம்,க 371
3. People of India, Maharashtra, P 1169
4. தேமொழி, எங்கள் வாழ்வும் எங்கள் வளமும், அறிவொளி பதிப்பு 2018. பக்-158.
5. இந்திய மானுடவியல் ஆய்வு, பானு. பதிப்பு-2004, பாப்புலர் பிரகாஷன் பக்-1169.
6. இந்தியாவில் சாதி மற்றும் இனம், Ghurye, G.S. 1969 பக்-85